JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC/ 208/2017 |
| | | Prosecution P.W -- 1 |
| NAME | : | Sudalai muthu |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act44of 1969) on the Tuesday of 02.03.2021.

மு.வி.

நான் குமந்தாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி ஜெயபாலனை தெரியும். எதிரிகளுக்கும் எனக்கும் ஒரு பெண் பிரச்சினையில் முன் விரோதம் இருந்தது. எதிரிகள் வீடு கட்டுவதற்கு பொது வழியில் மணலை வைத்திருந்தார்கள்.கடந்த 06.03.2016 ம் தேதி மாலை 05.30 மணிக்கு என் மனைவி கடைக்கு போய்விட்டு வரும் போது அந்த மணலை மிதித்துவிட்டார்கள் என்று எதிரி வெள்ளத்துரை என் மனைவியை தரக்குறைவாக பேசிக்கொண்டு, என் மணலை ஏன் மிதித்தாய் என்று கையால் அடித்து காயப்படுத்தினார். வெள்ளத்துரை மனைவி முத்தத்தாள் என் மனைவியை கையால் அடித்து காயப்படுத்தினார். எதிரி வள்ளி என் மனைவியை தலைமுடியை பிடித்து இழுத்து அடித்து காயப்படுத்தினார். எதிரி மாசாணம் மற்றும் எதிரி ஜெயபாலும் என் மனைவியை பார்த்து தேவிடியா இவளே உயிரோடு விடக்கூடாது என்று சொல்லி அடித்தார்கள். எதிரி செல்லம்மாள் என் மனைவியை வாரியால் அடித்து காயப்படுத்தினார். எதிரி வெள்ளத்தாயும் வாரியால் அடித்ததில் என் மனவைிக்கு மூக்குத்தியும், கம்மலும், இல்லாமல் போய்விட்டது, எடுக்கமுடியாமல் போய்விட்டது. அப்போது பக்கத்து வீட்டை சேர்ந்த சின்னசாமி மனைவி ஆரோக்கயயம்மாள் வந்து என் இப்படி அடிக்கீறீர்கள் என்று சத்தம் போட்டவுடன் எதிரிகள் என் மனைவியை உயிருடன் விடமாட்டேன் என்று சொல்லி

எங்களை மிரட்டினார்கள். இதனால் எனக்கு அவமானம் ஏற்பட்டது. எனது வீட்டும்மா மயங்க நிலையில் இருந்ததால் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் கொண்டு சேர்ந்தேன். அதன் பின் அன்றிரவு போலிசாரிடம் நான் புகார்மனு கொடுத்தேன். அந்த புகார் மனு என்னிடம் காட்டப்படுவதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு/வி : ( எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை).

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC/ 208/2017 |
| | | Prosecution P.W -- 2 |
| NAME | : | Papathi |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act44of 1969) on the Tuesday of 02.03.2021.

மு.வி.

நான் குமந்தாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி சுடலைமுத்து என் கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி ஜெயபாலனை தெரியும். எதிரி குடும்பத்து பையனும், எதிரி ஜெயபால் தவிடன் மகன் சேகர், குருசாமி மகன் என் ஊனமுற்ற பிள்ளை கற்பழித்தார்கள். அந்த 3 பேரில் முத்தாத்தாள் மகன் ஒருவர் ஆவார். ஆகையால் வழக்கு தொடுத்து பிரச்சினை இருந்து வந்தது. கடந்த 5வருடங்களுக்கு முன்பு இதே மாதத்தில் நான் கடைக்கு சென்றுவிட்டு எதிரிகள் வீட்டை தாண்டி எங்கள் வீட்டிற்கு வரும் போது எதிரி வெள்ளத்துரை என்னை பார்த்து தேவிடியா,பலவற்றை என்று அசிங்கமாக பேசிக்கொண்டு மண்வெட்டி கணையால் என்னை அடித்தார்ள. எதிரி முத்தத்தாள் என் கணவரை எப்படி பேசுவாள் என்று என் முடியை பிடித்து வளைத்து என்னை கீழே போட்டுவிட்டான்.எதிரி முத்தத்தாள்மகள் 3ம் எதிரி என்னை காலால்மிதித்தார். அதன் பின் எதிரி ஜெயபாலும், மாசாணம் வந்து என்னை காலால் மிதித்துக்கொண்டு, தேவிடியா பலவற்றை என்று அசிங்மகா பேசிக்கொண்டு, எவனை பாாக்க வந்தேன் என்று அசிங்கமாக பேசினார்கள்.அதன் பின் எதிரி செல்லம்மாள் என்னை ஈய்க்கு விலக்குமாறினால் என்னை அடித்து காயப்படுத்தினார். எதிரி வெள்ளத்தாய் அங்கியிருந்து வந்து என்னை அடித்து யார் கேட்க போகிறாய் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய மூக்குத்தியை பிடித்து இழுத்து காயப்படுத்தினார்கள்.

மூக்குத்தியும், கம்மலும் காணாமல் போய்விட்டது. எதிரிகள் என்னை அடித்ததால் எனக்கு 6 மாதம் எனக்குஉடல் பலவீனம் ஏற்பட்டது.அதன் பின் என் கணவர் என்னை கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். இது சம்பந்தமாக என் கணவர் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு/வி : (எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை).